2015 செப்டம்பர் 1]

187—

நுகர்வோர் குறைதீர் மன்றம்

***35022—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986, பிரிவு 9(a)-ன்படி, மாவட்டத் தலைநகரங்களில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், திருவள்ளூர் மாவட்டத்திற்கு என்று ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில், பொன்னேரியில் தனியாக மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ தந்து, தினந்தோறும் 110 விதியின் மூலமாக அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிடும் வகையிலே, நித்தம் நித்தம் மக்கள் திட்டங்களை அறிவித்து வருகின்ற வாழும் மனித தெய்வம், நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனசாட்சியுடன் வழங்கிய ஆதரவே ஆர்.கே. நகர் தொகுதியில் பெற்ற சரித்திர சாதனை வெற்றியாகும். விதி 110-ன்கீழ் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களை சில 420-கள் குறை கூறி வருகின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்*

2023 தொலைநோக்குத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிட திட்டங்களைத் தீட்டி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரில் அமைந்திருக்கின்ற மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமானது, பொன்னேரி தொகுயிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க ஆணையிட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது தொடங்க இருக்கின்றன. அந்த வளாகத்திலேயே, மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அமைத்துக்கொடுத்தால், அந்தப் பகுதி மட்டுமின்றி, திருவொற்றியூர், மாதவரம், கும்மிடிப்பூண்டி போன்ற தொகுதிகளில் இருக்கின்ற மக்களும் பயன்பெறுவார்கள் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, அதனை வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்படவேண்டும். அதன் அடிப்படையில், தற்போதுள்ள 32 மாவட்டங்களில், 30 மாவட்டங்களில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மேலும், திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் சுமார் 150 வழக்குகள் மட்டுமே உள்ளன. பொன்னேரி பகுதியில் போதுமான வழக்குகள் இல்லை என்பதனையும், அங்கு மாவட்ட நுகர்வோர் மன்றம் அமைக்க அவசியம் எழவில்லை என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

188—

பேருந்து வசதி

***52564—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு தினசரி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு நேரடிப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆய்வு செய்ததில், பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தினசரி பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் குறைவு. இருந்தாலும், எதிர்காலத்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் கடலே! ஏழைகளின் வாழ்வு உயர, அயராது பாடுபடும் எங்கள் கருணை தெய்வமே! கழகத்தின் இதயத் துடிப்பே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித இனத்தின் மாண்பே!*